கா ல வ ரி ஷி

என்னும்

சித்திரசேன கேந்தர்வ உபாக்யானம்.

Kalavarishi

Edited by

M. A. SADAGOPACHARI
KUMBAKONAM.

PRINTED AT THE
LAKSHMI VILASA PRESS
KUMBAKONAM
1915

Price]

PREFACE.

முகவுரை.

இவ்வுலகில் மனித ஜென்மமெடுத்த அனைவரும் தன் பால்யகாலத்தில் பாபம் புண்யம் இன்னதென அறியாமல் ஈச்வரனையும், பெரியோர்களையும், பெற்றோர்களையும், உற்றார், உறவினர்களையும் மதியாது தூஷிப்பதும், அவமதிப்பதுமாயிருந்து பல பாபங்களையும், சாபங்களையும் கைக்கொள்ளுகிறார்கள். அதன்பின் தன்வயதுமுதிர்ந்த காலத்தில் தன்னால் பால்யத்தில் செய்யப்பட்ட எவ்வித துஷ்கிருத்யங்களையும் சிலர் உணர்ந்து மனக்லேசமுற்று நற்காரியங்களைச்செய்து நல்வழியிலும் நடந்துகொள்ளுகிறார்கள். அப்படிக்கில்லாது சிலர் தன் வாழ்நாள் முழுமையையும் பால்யத்தில் நடந்துகொண்டதுபோலவே பாபகிருத்யங்களையே செய்துவருகிறார்கள். இவ்விருவர்களையும் ஈச்வரன் ஒரே மாதிரியாக பாவிக்கமாட்டானென்பது திண்ணம். பால்யகாலத்தில் அக்யானக்ருதமாகச்செய்து அதன்பின் தன் வயதுமுதிர்ந்தகாலத்தில் தன்னால்செய்யப்பட்ட பாபங்களை ஒருவாறுக்ஷமிக்குமாறு பகவானை ப்ரார்த்தித்தமாத்திரத்தில் அவ்வீசனும் இவன் வேண்டுகோளுக்கிணங்கி, பெற்றோர்கள் பிள்ளைகளின் அபசாரத்தை க்ஷமிப்பதுபோல் கடவுளும்நம்மைமன்னித்து ஸத்கெதிக்குள்ளாக்குகிறார். இதற்கு திருஷ்டாந்தம், அனேகருளர். நாம் அக்யானகிருதமாய் எவ்வளவு பாபங்கள் செய்திருந்தபோதிலும் அவைகளை ஒளியாது கடவுளிடம் தெரிவிப்போமாகில் நம்பாபங்களை ஒருவாறு க்ஷமித்துக்கொள்வதுடன் நம்மையும் நற்கெதிக்கு ஆளாக்குகிறார். அதனாலேயே ஈச்வரபக்தி அவசியம்.

அப்படி ஈச்வரபக்தியுள்ளவனிடத்தில் அன்புகூர்ந்து அடியாராக விருக்கிறுர். அவையே

"அடியார்க்கடியார்"

எனப் பெயர்வாய்திருக்கின்றது.

இச்சரிதத்தில் அர்ஜுனன் தன் பத்னியான சுபத்ரையின் வார்த்தைக்கிணங்கி ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவை அவமதித்தும் யுத்தத்திற்கு ஸன்னித்தமாகவந்தும், பரமாத்மா, தன்பக்தனைக்காத்தும் அவனுல் தன்பத்னிக்கு வாக்களிக்கப்பட்டதை நிரவேறுமாறுசெய்தும், "பக்தவத்ஸலன்" என்ற பெயரையும் உறுதிப்படுத்தினுர் என்பதை காட்டுகின்றது. ஆகையால் சித்திரஸேனனைப்போல் ஸதிரிகள் சொல்லுகிறபடி நடவாமலும். தனக்கொவ்வாத காரியங்களில் பிரவேசிக்காமலும் ஈச்வரகிருபைக்குப் பாத்திரர்களாக வேண்டுமெனவும், தங்கள் தங்கள் குழந்தைகளை அதன்பால்யகாலத்தில் பெரியோர்நிந்தனை, சோரம், அஸத்யம், ஜீவஹிம்ஸை, ஈச்வரத்வேஷம் என்ற பாபகாரியங்களில் பிரவேசிக்காவண்ணம் நற்புத்திபுகட்டுமோரும் வேண்டுகிறேன்.

KUMBAKONAM,
26th October, 15.

Yours faithfully,
M. A. SADAGOPACHARI,
Author.

கா ல வ ரி ஷி

என்னும்

சித்திரசேன கெந்தர்வ உபாக்யானம்.

களம் 1.

தேவலோகத்தில் அமரேசன் தர்பார்.

நிர்மலமாயும், நித்ய சூரிகளால் வஸிப்பதற்குத் தகுதி யுள்ளனவாயும், தேவர்கள், கின்னராள், கிம்புருஷாள் கெருட, கெந்தர்வ, வித்தவித்பாதியர்களால் புகழப்பெற்றதும், ஐராவதம் என்ற வெள்ளையானை நடமாடும்படியானதும், தேவர்களாலும், மற்றுமுள்ள ஸத்யபாமையால் இச்சிக்கப்பெற்ற பாரிஜாத புஷ்பமலர்களின் வாசனையால் பரிமளிக்கப்பட்டதும், மகரிஷிகளால் கொண்டாடக்கூடியதுமான தேவலோகத்தில் ஓர்நாள் அனேக மகரிஷிகளால் புடைசூழப்பெற்ற தேவராஜன் தன்னுடைய சதஸில் நடத்தவேண்டிய காரியங்கள் அனைவற்றையும் நடத்திய பின் அங்கு வந்திருக்கும் வஸிஷ்டர், வாமதேவர், விச்வாமித்திரர், சுக்கிராச்சார், நாரதர், ரிஷிச்ருங்கர் முதலான மகரிஷிகளை ஸந்தோஷிக்கும்பொருட்டும், தனக்குள்ள சிரமத்தைச் சற்று சமனஞ்செய்துகொள்ளவும் என்

ணமுற்று, தேவதாசிகளான ரம்பை, ஊர்வசி, திலோ த்தமை, மேனகை முதலான தேவகன்னிகைகளை நர்த்த னம் செய்யுமாறு ஆக்யாபித்தனன். அமரேசன் ஆக் ஞையை கைக்கொண்ட ஸேவகர்கள் சற்றேனும் தாமதி யாது, அச்சதவிற்கு தேவநட்டுவனான சித்திரஸேனனை யும், தேவதாஸிகளையும் அழைத்துவந்தார்கள். அக்கால த்தில் ஊர்வசியோ பூலோகம் சென்றிருந்தமையால், சற்று தாமதமாக வரலாயினள். தேவராஜன் ஊர் வசியிடம் அதிக பிரேமை வாய்ந்தவனாகையால், அப்பெ ண்ணைக் காணமையைக்கண்டு கோபித்தனன். ஊர்வசியும் அதையறிந்து தேவராஜனை சந்தோஷிப்பிக்குமாறு, தானே அன்று ஈர்த்தனத்தை நடிக்கலாயினள். நர்த்தனம் செய் யும்போது, தான் தாமதித்து வந்ததை அனுசரித்தே கான மும் செய்தனள்.

இன்னேரஞ் சேன்று வந்தாயென்று
நினைத்து இந்திரன்
ஸ்வாமி கோபமென்ன செய்குவாரோ
கோறி என்மீது.

எனப் பாடிக்கொண்டும், அபிநயமும் பிடித்தனள். அமரேசன் வதனம் குளிர்ச்சியாக விருக்கக்கண்டு, தன்னி டம் பக்ஷம் வைத்திருப்பதை உணர்ந்து, மறுபடியும் வேறு கானத்தைப் பாடினள்.

தக்தி ரமார இந்திரே கைஸி பதல்கயி
தேகோ பால கைலாஸ் கஹர் மாபர்.

எனப் பாடி கிஞ்சின் ஆட்டத்தையுமாடினாள். சதா வினுள்ள அனைவருக்கும் மனமகிழ்ச்சியுண்டாயிற்று. நட்

டுவனான சித்திரஸேனனும் தனக்குத்தெரிந்த வல்லமை யாவற்றையும் காட்டி, ஒருநாளும் இம்மாதிரி நடக்காத நர்த்தனமாக நடித்துவைத்தனன். மகரிஷிகள் எல்லோரா லும் சித்திரஸேனன் புகழப்பட்டான். இதையறிந்த தேவ ராஜன் மனமகிழ்ந்து, சித்திரசேனனுக்குப் பரிசளிக்கு மாறு சமீபமாக வரவழைத்து, அவனுக்கு வேண்டியதைக் கோருமாறு ஆக்யாபித்தனன். சித்திரசேனனோ, தான், நாட்டிய வேலையில் ஒப்புக்கொண்ட தேதிமுதல் ஒருநா ளும் வீட்டினில் தங்காதபடி இரவு முழுமையும் தேவரா ஜன் சதஸில் நர்த்தனம் நடித்துவைப்பதே வேலையாகவிருந் தமையாலும், தன் சொஸ்திரீகளான 10 பேர்களுடன் அதி உல்லாசமாயிருந்து அவர்கள் மனதையும் சந்தோஷிக்காம லிருப்பதைப்பற்றியும்,வெகுநாளாக மனக்கவலை யுற்றவனாக விருந்தமையால், இதுதான் சமயமெனக்கண்டு, தனக்கு ஒரு மாதகாலம் வேலையிலிருந்து சம்பளத்துடன் செலவு கொடுக்கவேண்டுமென வேண்டினன். (செலவு என்றால் லீவு என்ற அர்த்தம்.) அச்சமயம் தேவராஜனை எது கேட்டாலும் கொடுக்கத் தயாராகவிருந்தவன் இந்த மூடன் கேட்கும் கேள்விக்கு நகைத்து, அப்படியே ஒருமாத விடுமுறை சம்பளத்துடன் அளித்தாகச் சொல்லி அனுப்பி விட்டனன். சித்திரசேனனுக்கோ ஆனந்தம் இவ்வள வெனச் சொல்லமுடியாதபடி ஓரிடத்திலும் நிற்காமலும், ஒருநிமிஷமேனும் வீண்காலம் கழிக்காமலும் தன்னுடைய பத்தினிகளிடம் சென்றுவிட்டனன்.

களம். 2.

சித்திரசேனன் அந்தப்புரம்.

எப்போதும் தங்கள் கணவன் தேவஸபையிலிருந்து, வரும்போது சரீரம் களைத்தும், முகம்வாடியும், அதிக

சோர்வடைந்தும், வருவது வழக்கமாயிருக்க அன்று வெகு உல்லாஸத்தோடு வருவதைக்கண்ட ஸ்திரீகள், ஏதோ ஆச்சரியமிருக்கவேண்டுமென நினைத்து, தன் பர்த்தாவிடம் 10-ஸ்திரிகளுமாய்ச்சுற்றி நின்றுகொண்டு, நாதா! இன்று என்ன விசேஷம். ஒருநாளுமில்லாதத் திருநாளாக விருக்கின்றதே. முகமலர்ச்சியும், சரீரப்பூரிப்பும், மனஉல்லாசமும், வேறுமாதிரியாகவே இருக்கிறீர்கள். யாது தெரிவிக்கவேண்டுமென எல்லோரும் ஏகோபித்து வேண்டினார்கள். தன் பத்னிகளிடம் அதிகப்ரேமைவாய்ந்த சித்திரஸேனன் அதிக கெம்பீரமாய் தனக்குக்கிடைத்திருக்கும் வெகுமதியான ஒரு மாலைரஜாவை யெடுத்துரைத்தான். ஸ்திரீஜாதிகளுக்கு கணவனைக் கைவசப்படுத்துவதிலேயே ஆவலுள்ளவர்களாகையால் இதுகாரும் ஸமயம்நேராத துக்கத்தினால் ஸமயம் வாய்த்ததைப்பற்றி அவரவர்களிடம் பிரத்தியேகமான அன்பைப்பெறவெண்ணி ஒவ்வொருவரும் தன் கணவனைப்பார்க்கிலும் பதின்மடங்கு அதிகமாய் சந்தோஷிக்க ஆரம்பித்தார்கள் ஒவ்வொருவரும் அவரவர்களுக்குள்ள ஆடையாபரணங்களைத் தரிப்பதும், கணவனுக்கு வேண்டிய தின்பண்டங்களைத் தயாரிப்பதும். ஒருவர் பின் ஒருவராகக் கொடுப்பதும், ஸுகிப்பதுமாயிருந்தார்கள். இப்படி 15 தினங்கள் ஆகிவிட்டன. ஸ்திரீகளுக்கோ அவர்கள் மனக்கவலையை மறண காலத்திலும் அதன் பின்னும் ஒழிக்கவல்லமை யில்லாதவர்களானதால் திருப்தியடையாமற் இருந்தார்கள். இதையறிந்த சித்திரசேனன், இவர்கள் எல்லோரையும் ஏககாலத்தில் ஸந்தோஷிக்கச் செய்யவேண்டுமென நினைத்து ஹே! பெண்கள்நாயகங்களே உங்கள், மனதிலுள்ள குறைகளை நீக்கி எல்லோரையும் ஸந்தோஷிக்கச் செய்யவெண்ணியே இது சமயம் ஒருமாலைரஜா யெடுக்,

கூலானேன். நீங்கள் எல்லோரும் தனிமையாகச்சென்று யோஜித்து எந்தவிதம் செய்தல் உங்கள் மனம் பூர்த்தியாகுமெனதீர்மானித்துக்கொண்டு வாருங்களெனச் சொல்லி விட்டான். அவ்விதமே எல்லோரும் கலந்து யோஜித்ததில். கடைசியாக எவ்விதம் கோபஸ்திரீகள் கிருஷ்ணபரமாத்மாவை யமுனாநதியில் ஜலக்ரீடைசெய்யவேண்டுமெனக்கேட்டு கொண்டார்களோ அவ்விதமே நாமும்செய்யவேண்டுமெனத். தீர்மானித்துக் கொண்டு தங்கள் கணவனை அடைந்து தாங்கள் யோஜித்து முடிவு செய்து கொண்டபிரகாரம் யமுனா நதிக்கரையில் சேர்ந்து அந்நதியில் ஜலக்ரீடைசெய்ய அபிப்பராயப்பட வேண்டுமெனக்கேழ்க்க, இதுவே தகுதியென்று தானும் ஸம்மதித்து அவரவர்களுக்கு வேண்டிய ஆடையாபரணங்கள் சந்தனம், கெந்தகப்பொடி, தாம்பூலம்: சிற்றுண்டி, புஷ்பம் முதலான எல்லாவற்றையும், சேகரித்துக்கொண்டு தயாராகவிருக்கும்படிக்கும் உத்திரவளித்து விட்டான். அவ்வாரே அவர்களும் தயார் செய்து கொண்டார்கள். மறுதினம் காலே 6-மணிக்கு ஆகாயமார்க்கமாய்ச் செல்லக்கூடியரதத்தில் பத்து ஸ்திரீகளுடன் தானும் மத்தியில் வீற்றிருந்து அதிக உல்லாஸத்துடன். யமுனாநதியை நோக்கிப் புரப்பட்டுவிட்டார்கள். அதிவிரைவாகவே ரதத்தை நடத்தி மாலே 6-மணிக்கு யமுனா நதியின் தென்கரைக்கு வந்து சேர்ந்தார்கள்.

களம் 3.

காலவரிஷி ஆச்ரமம்.

இவர்கள் இறங்கிய இடத்திற்கு சுற்று அருகாமையிற் காலவரிஷியின் ஆச்ரமமானதால் அதிரமணீகரமாயும் பல லதாக்ரகங்கள் கூடின நிழலடர்ந்த இடமாயும்,

மஹரிஷியின் பூஜார்கமான பலஜாதி புஷ்பங்களின்பரிமளமுள்ளதாயும், அப்புஷ்பங்களிலுள்ள தேன்களை அருந்த வேண்டிப் பல தேனீக்களின் ரீங்காரமானது அவ்வாச்ரமத்தை காவலாளிகள் ஒருவரும் இல்லாதபடி காப்பதுபோலும் நிர்மலமாயும் சுத்தஸ்படிகம்போன்ற நீரையுடைய அவ்வாச்ரமத்தின் குளத்திலுள்ள மச்சங்கள் எதேச்சையாக சஞ்சரிக்கும்போதும், சரீரம் அப்புரம் இப்புரம் புரளும்போதும், அதன் விலாப்புரத்தின் ஜோதிஸ்ஸானது மின்னல் மின்னுவதுபோலும், பல வர்ணங்களைக் காட்டக்கூடிய உலாந்தா கமலத்தின் ஒளியைப்போலவும், பிடிக்கக்கூடிய மனிதஸஞ்சாரமில்லாமையறிந்து, பலஜாதிப்பறவைகள், பட்சிகள் தங்கள்தங்கள் நாயகனோடும், குஞ்சுகளோடும் தங்களுக்கு இஷ்டப்பட்ட விருக்ஷங்களில் வீற்றிருந்து அதிமதுரமான கனிகளைக் கொத்தித்தின்றுகொண்டும், தங்களின் குஞ்சுகளை ஆனந்தமாய்க் கூவிக்கொண்டும், ஸர்வனங்கள் தங்களை இம்சிப்பவர்கள் ஒருவருமில்லையென நன்குணர்ந்து, எதேச்சையாக ஸர்வதும், மிருகஜாதிகள் நிர்பயமாய் வந்து நடமாடவும், அதிலும் யானைகளில் வயதில் முதிர்ந்தவைகள் முன்னிலும், குட்டிகள் மத்தியிலும், நடுத்திரங்கள் பின்பக்கத்திலுமாய் வந்து, தங்கள் தாகத்தைத் தீர்க்கத் தண்ணீர் அருந்தும் சப்தமானது குடு, குடு, குடுவெனக் கேழ்ப்பது, ஹே! சம்சார வாழ்க்கையில் உழன்று, அநேகவித பாபங்களைச் சம்பாதித்து, அதைப் போக்கிக்கொள்ள வழிதெரியாது விழிக்கும் ஹே! மானுஜா, உங்கள் பாபம் எவ்வளவாயினும், இந்தப் புண்யபூமியில் வசிக்கும் மகாதபஸ்வியான மகரிஷியிடம் கொடுத்து, புண்யாத்மா வாகிவிட உங்கள் பாபத்தை உடனே கொடு, கொடு, கொடு எனச்சொல்வது போலவும், அப்பூமியானது யமுனா நதியின்

வண்டல் மண்ணினால் நிறப்பப்பட்டுள்ளதால், அவ்வண்டல் மண்ணின் வாசனையோடும், அப்பூமியிலுள்ள சந்தனம், தேக்கு, அகில், தேவதாரு முதலான மரங்களின் வேர்கள் ஓடியிருந்து மண்ணுடன் கலந்து, அவ்விரண்டும் சேர்ந்து உண்டாகும் வாசனையானது நல்ல பரிமளத்தைக் கொடுக்க்கூடிய வாசனைப்பொடியின் பரிமளம்போலும்; மான், கடம்பை, யானைக்குட்டிகள், மயில், வான்கோழி, புரா, கிளி, மைனா இவைகள் நடமாடும்போது, தலையை ஆட்டிக் கொள்வது ஹே பாபிகாள்! இந்தப் புண்யபூமி உங்களுக்குத் தகுதியன்று; வரவேண்டாம் என்பது போலுமிருந்தன. அந்த இடத்தை அடைந்தான் சித்திரசேனன். அவன் பத்னிமார்கள் ஒருவரையொருவர் அழைத்துக்கொண்டு அந்நந்தவனத்திலுள்ள புஷ்பங்களைக்கொய்து விளையாட வாரம்பித்தார்கள்.

போவோம் வாரீர் ஸகிகாள்
பூங்காவனம் தன்னை நாடி
காவலர்கள் வரு முன்னே
பூமலர்கள் கோய்திடுவோம்.

மல்லிகைமுல்லை ரோஜா மருஇருவாக்ஷிகளும்
நல்லநல்ல பூவெடுத்து நங்கையரே நாமுடிப்போம்.
சுந்திரமான அந்த சந்தனவிருக்ஷங்களிலும்
கோவையரே நாமெல்லோரும் கூடிவிளையாடிடுவோம்.
யமுனாநதி ஜலத்தில் நம்கணவனோடு சேர்ந்து
சுகந்தமாகவேகூடி ஜலக்ரீடை செய்திடுவோம்.

ஆச்ரமத்திற்கு சற்றுதூரமாயுள்ள படித்துறையை நாடினார்கள். அன்றுபௌர்ணமியானதால், நிஷ்களங்கமான சந்திரன் தன் மருவற்ற ஒளியைவீச ஆரம்பித்தான். அவ்வொளி

பால் மரங்களின் இலைகளிலுள்ள பனித்துளிகள் நல்ல முத்துக்களைப்போலவும், பகற்பொழுதில் சூரியகிரணத்தால் சரீரத்திற்கு தண்டிக்கப்பட்ட வெப்பமானது, இந்தக் குளிர்ச்சியை ஸ்பரிசித்தலும், சரீரம் புளகாங்கித்மாகவு மிருக்குமாறு சந்திரனும் விளங்கினன். ஜலக்ரீடைக்கு வேண்டிய கெந்தம், வாசனைப்பொடி, தைலம், சந்தனம் முதலான வாசனைச் சாமான்கள் யாவற்றையு மெடுத்துக்கொண்டு, படித்துறையில் கீழேயிறங்கி, மத்தியில் சித்திரசேனனை நிருத்தி, சுற்றிலும் மற்ற ஸ்திரிகள் நின்றுகொண்டு ஜலக்ரீடை செய்தார்கள். விடியற்காலம் மணி 4 ஆயிற்று. ஜலக்ரீடையும் முடிந்தது. இந்த இடமோ காலவரிஷியின் ஆச்ரமமானதால், இனி மகரிஷி இவடம் ஸ்நானத்திற்குத் தன் சிடர்களோடு வந்துவிடுவார். அக்காலத்தில் நாம் இங்கு விருப்போமாகில் நமக்குச் சாபமிடுவார். ஆகையால் நாம் இனி இவடமிருப்பது தகுதியன்று எனமதித்து கரையைச் சேர்ந்து, ஆடைகளை தரித்துக்கொண்டு, சிற்றுண்டிகளை அருந்திவிட்டு, சந்தனம், புஷ்பம் அணிந்து தங்கள் ரதத்தில் ஏறி, ஆகாயமார்க்கமாய் ரதத்தைச் செலுத்தினர்கள்;

களம் 4.

காலவரிஷி பிரவேசம்.

நிற்க, மணி 4 ஆனவுடன் மகரிஷியான காலவரிஷி; நித்யகர்மானுஷ்டானத்திற்கு தகுதியான காலம் வந்துவிட்டதென அறிந்து, தன் சிஷர்களோடு புறப்பட்டு, வழக்கம் போல் ஸ்நானம் செய்யும் படித்துறையை அடைந்தார். சிஷர்களுடன் அடைந்த மகரிஷியானவர் சங்கல்பத்தைச் செய்துகொண்டு ஸ்நானத்திற்கு நதியில் இறங்கினர். எப்பொழுதும்போல் இராது, படித்துறை முழுமையும் சுகந்த

பரிமளமும் கூடியிருந்தபடியால், சிஷர்களுக்கு இவ்விடத்தில் யாதொரு சம்பிரமங்களும் நேருவதற்கு எதுகாமற்றவையென அறிந்தமையால், அவர்களும் கவனியாது தங்கள் கடன்களை முடித்தார்கள். ரிஷியும் ஸ்நானம் செய்தபின், சந்தியாவந்தனம் செய்ய எத்தனித்தனர். இருகைகளிலும் ஜலத்தை எடுத்துக்கொண்டு அர்க்யபிரதானம் செய்வதற்கு காயத்ரீ மந்திரத்தை உச்சாடனம் செய்ய ஆரம்பித்தனர். நிற்க, ககனமார்க்கமாய்ச் சென்ற சித்திரசேனன் தன் பத்னிகளின் மத்தியில் உட்கார்ந்துகொண்டு, தன் ஸ்திரீகளால் கொடுக்கும் தாம்பூலத்தைத் தரித்துக்கொண்டிருந்தான். ஒவ்வொரு ஸ்திரீகளும் அவரவர்களுக்குள்ள மனோரதத்தை பூர்த்திக்குமாறு, ஒவ்வொருவரும் சீவல் கொடுப்பதும், வெற்றிலை கொடுப்பதுமாக விருந்தார்கள். சித்திரசேனனுக்கு பத்து ஸ்திரீகளால் கொடுக்கப்படும் தாம்பூலம் ஜாஸ்தியாகவும், வாய் கொள்ளமுடியாமலுமிருந்தபடியால், தன்னால் இயன்றமட்டும் சமாளித்தும் தாம்பூலத்தின் (உச்சிஷ்டத்தை) தம்பலத்தை வாயில் அடக்கிக்கொள்ளமுடியாமல், கீழே துப்பிவிட்டான். சித்திரசேனனால் துப்பப்பட்ட தம்பலமானது, இருகைகளிலும் நிறம்ப ஜலத்தோடு அர்க்கியம் விடவேண்டியிருக்கும் மகரிஷியின் கையில் சடேரென விழுந்தது. இருகரங்களிலும் ஜலத்தோடு இருக்கும் ரிஷியின் கரங்களில் அகாலத்தில் விழுந்த பதார்த்தம் இன்னதென்று அறியக்கூடாமல், புட்களோ, அல்லது பறவைகளின் எச்சமோவெனச் சந்தேகித்துத் தன் சிஷர்களை பரிசீலனை செய்யும்படி சொன்னார். அவ்வாறே குருவின் வார்த்தையைச் சிரசால்வகித்த சிஷர்கள் உடனேவந்து, கரத்திலுள்ள ஜலத்தைப் பார்க்கையில், குங்குமப்பூ, பச்சைகற்பூரம் முதலிய வாசனைச்சாமான்

கலந்த சிவப்பு நிறமாக விருக்கக்கண்டார்கள். பின்னும் அதை உற்றுநோக்கச்சலமானது அதிகமேன்மையான வாசனையோடும், நன்றாக மெல்லமுடியாத பாக்கின் சின்னமும், வெற்றிலைத் துணுக்குகளும் மிதக்கக்கண்டார்கள். ஓஹோ ! இது தாம்பூலத்தின் உச்சிஷ்டமென நிச்சயித்து, மகரிஷியிடம் உள்ளபடி அறிவித்தார்கள். மகரிஷிக்கு மகத்தான கோபம் வந்துவிட்டது. எந்த துராத்மா, என் அர்க்கியத்தைக் கெடுத்தவன் என இருகண்களும் சிவந்து, ஞானதிருஷ்டியால் கவனிக்க, சித்திரசேனன் தன் ஆச்ரம படித்துறையில் சென்ற இரவு ஜலக்ரீடை செய்ததாகவும், அதன் பின் தாம்பூல உச்சிஷ்டத்தை ககன மார்க்கத்திலிருந்து உமிழ்ந்ததாகவும் அறிந்தார். கோபாவேசம் கொண்டார். அடே துஷ்டா, உனக்கு இவ்வளவு மமதையா. தேவேந்திரனின் சலுகையா. பத்து ஸ்திரீகளை அனுபவித்த காமத்தின் மமதையா. ரிஷியை அவமதிக்க வெண்ணின சரீர வலுமையாவெனச் சொல்லி, இருக்கட்டும் பார்க்கிறேன் என்று மருபடியும் ஸ்நானம்செய்து நித்யகர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு, சிஷர்களுடன் மன அருவெறுப்புடனும், கோபத்துடனும் தன் ஆச்ரமத்தை அடைந்தார்.

களம் 5.

நாரதர் பிரவேசம்.

இதுசங்கதியை அறிந்த நாரதமகாமுனிவர் தனக்குள்ள தொழிலைச் செய்யவேண்டி, மகரிஷியிடம் வந்தார். வந்த நாரதருக்கு காலவரிஷி அர்க்யபாத்ய ஆசவனீயம் கொடுத்து வீற்றிருக்கச் செய்தார்.

நாரதர் :—காலவரிஷே! என்ன ஒருமாதிரியாக விருக்கிறீர். என்ன இவடமெல்லாம் நல்ல வாஸனையாக விருக்கிறது. எதாகிலும் நேற்றிரவு விசுவாமித்திரருக்கு மேனகை கிடைத்ததுபோல், எதாவது உருப்புடி சிக்கிக்கொண்டதோ? இல்லாவிடில் முக மலர்ச்சிக்கும், தபோபலத்திற்கும் குறைவுபட்டதாக முகம் காணப்படமாட்டாதே. அதிலும், தேவராஜன் அந்தப்புரத்தைக் காட்டிலும் அதிகமான வாசனையும் இருக்கக் காரணமில்லையே. ஏதோ ஸங்கதி உண்டுபோலத் தான் தோன்றுகிறது. நானும் அதைக் கொஞ்சம் கேட்டு ஆனந்திக்கக்கூடாதா சொல்லும் பார்ப்போம். தங்கள் சிஷர்கள் அறியச்சொல்ல மனமில்லாவிடில், தனிமையாகவாவது போவோம் என்று சடாச்சுவிட்டார். நாரதர் சொல்லச் சொல்ல, காலவரிஷிக்கு கோபம் வருவதும் அக்கோபத்தினல் கண்கள் சிவப்பதும், முகம் மாருவதுமாய் ஆகிவிட, ரிஷிக்கு பேச முடியாமற் றிணரினர். கலியாண வீட்டிலேயே கட்டியழும் நாரதர், எழவுவீடென்றல் சும்மாவிருப்பரா? மருபடியும் கேழ்க்கத் துடங்கினர்.

காலவரிஷி :—நாரதரே, நான் அப்படிக்குச் செய்பவனு? ஸ்திரீகள் என்றல் இன்னதென அறியாத என்னைப் பலவிதமாய் தூஷிக்கலாமா?

நாரதர் :—ரிஷியே, என்ன தெரியாமல் பேசுகிறீர். நீர் அபேக்ஷித்ததாகவாவது, உம்மாலேயே எற்பட்டதாகவாவது நான் சொல்லவில்லையே. ஒருக்கால் விசுவாமித்திரரிஷியை மேனகை தானகவே வந்து, அவர் தபோபலத்தைக் கெடுக்கக் கருதினதுபோல், உமக்

கும் ஒருக்கால் கிடைத்ததோ வென்று கேட்டேன். நீர் ஏன் வருத்தப்படவேண்டும், ஐயா, நான் ஒன்றும் அழைக்கவில்லை, அவனையும் தொந்திரவு செய்யவில்லை. அதன்பின் ஸ்திரீகளின் மனதை பூர்த்தி செய்யவேண்டியது ஆண்பிள்ளைகளின் கடமையானதால், அவ்விதம் செய்ய நேர்ந்தது என்று சொல்லிவிடுமே. நான் என்ன, வெளியில் சொல்லுவேனே? என்ன அப்படி எண்ணிவிட்டீர். ஒருக்காலும் சொல்லவேமாட்டேன் என்றார் நாரதர்,

காலவரிஷி :—நாரதரே, அவைகளெல்லாம் ஒன்றுமில்லை. மகாபாபியான தேவலோக நட்டுவன் சித்திரசேனன் தன் பத்னிமாரோடு இங்குவந்து நம் படித்துறையில் ஜலக்ரீடை செய்து, "அப்போது நாரதர் நிருத்தும், நிருத்தும். என்ன சித்திரசேனன் தன் சம்சாரங்களோடு ஜலக்ரீடை செய்தானு? வெகு தொந்தான். அப்புரம் சொல்லும்." ரதாபிருடனுக ககனமார்க்கத்தில் சென்றுன். காலையில் என் நித்யகர்மானுஷ்டானத்தை முடிக்கவேண்டி யமுனைக்குச் சென்று, ஸ்னானம் முதலானதுகள் செய்து அர்க்யம் விடும்போது, கையிலுள்ள ஜலத்தில் மகா துஷ்டனுன சித்திரசேனன் தன் தாம்பூல உச்சிஷ்டத்தை உமிழ்ந்துவிட்டனன். அதுமுதல் மனதில் அருவெறுப்பும் கிலேசமுமாக விருந்துவருகிறதால், முகம் வேருபாடடைந்திருக்கலாம், இதுவே உண்மையென மொழிந்தார்.

நாரதர் :—இனி என்ன செய்யப்போகிறீரோ ?

காலவரிஷி :—என்ன செய்வது ஒன்றுமில்லை. ஏதாவது சபித்தால் நம் தபோபலம் குறைந்துவிடுமே. ஆகையால் போனது போகட்டுமென விருக்கிறேன் என்றுர்.

நாரதர் :—ஒன்றுமில்லையா? ஸரிதான், மருபடியும் அந்தத் தடியன் வரமாட்டானு? முன்போல் செய்யமாட்டானு? இரவில் உம்ம ஆச்ரமத்தையே பள்ளியறையாகவும் வைத்துக்கொள்ளுவன், உம்மையும் இவ்விடம் விட்டு விரட்டி விட்டாலும் ஆச்ரமமும் தாவிக்கிரகமாக்கிவிடலாம். வேண்டாம் இனி வேரு இடத்திற்குச் சென்றபோதிலும் உம்மை எப்போது அவமானப்படுத்த எண்ணி இருக்கிருனே என் அங்கும் வரமாட்டான். கட்டாயம்நேரும். நீர் இனி மாதம் ஒரு இடமாக மாறத்தான்வேண்டும். இதுநடப்பதற்கு சந்தேகமில்லை. அந்தப்பயல் போனமாதமே தேவலோகத்தில்சொன்ன மாகாபாபிதானே. அப்படியே நடத்தியும்விட்டானு. பேஷ், பேஷ் ரொம்ப ஏப்பாடுதான். ஏழையைக் கண்டால் மோழையும் பாயுமென்பதுபோல் ரிஷி, இவன் என்ன பண்ணமுடியும், என்றல்லவோ நினைத்துவிட்டான். என்னிடம் அந்தப்பயல் அவன் கைவரிசையைக் காட்டி இருக்கவேண்டும். அப்போது சொல்லுவேன் வழி அவனுக்கு. என்னவென்று நினைத்துவிட்டீர்.

காலவரிஷி :—என்ன பண்ணுவீர் சாபந்தானே கொடுக்கமுடியும்.

நாரதர் :—சாபமா! இந்தப்பயலுக்கா; சாபம், வெகு அழகுதான், சாபத்தைக்கொடுப்பானேன் தபசில்நஷ்டத்தை அடைவானேன். அதற்குவேருவழியில்லையா? என்ன.

காலவரிஷி :—என்ன வழி சொல்லுமே பார்ப்போம்.

நாரதர் :—பார்ப்பதற்கு நான் சொல்லுகிறவனன்று. காரியத்தை நடத்தி அந்தப்பயலை இதோடு துலைப்பதற்கு

சொல்லுகிறவன். நீர் செய்கிறேன் என்று சொல்லும், ஒருகை பார்த்துவிடுகிறேன். அப்படி நடக்காமல் போனால் என் பெயர்தான் நாரதராகுமா? பின்பு இந்தத்தம்பூரைத் தான் தூக்கிச்சுமப்பேனோ?

காலவரிஷி :—அப்படியே செய்கிறேன். இனியும் நீர்சொல்வதுபோல்அடிக்கடிவந்து தொந்தரை செய்தால் என்ன பண்ணுவது என்ற பயமும் மேலிடுகிறது. ஆகையால் உம்ம சகாயத்தால்த்தான் அது நிறைவேரவேண்டும். எதாகிலும் சாபம் கொடுப்பதைத் தவிர்த்து வேரு உபாயமிருக்குமாயின் நான் கட்டாயம் செய்கிறேன் எனச்சொன்னர்.

நாரதர் :—நீர் சொன்னது உண்மைதானே. பின்பு யோஜிப்பீரோ. அதை உறுதியாகச்சொல்லும் வெகுசுலபமாய்க் காரியத்தை முடிக்கிறேன் பாரும்.

காலவரிஷி :—நிச்சியமாய் செய்கிறேன். இனி மாரமாட்டேன், சத்தியம்.

நாரதர் :—பிடித்ததப்பா சனியன், இப்போதுதான் நம் வேலை பலித்தது. நாரதர் என்றால் ஸாமான்யமா. இந்தப்போடு போடாவிட்டால் இந்தக்கிழவன் வழிக்கு வருவானே? என்று தனக்குள்ளே நினைத்துக்கொண்டு ஓய் காலவரிஷே இப்போது நமக்கெல்லாம் ராஜன் கிருஷ்ணனல்லவா, அவரே நம்மைப்போலொத்த ரிஷிகளையும் ஸாதுக்களையும் காக்கப்பட்டவரல்லவா. அவரிடம்முறையிட்டால் தானேவழிவிடுகிறார். புறப்படும் பார்ப்போம் என்று கிளம்பினர். நாரதரும் அவ்வாறே காலவரிஷியும் புறப்பட, இருவருமாய்ப் புறப்பட்டு த்வாரகைக்குச் சென்றார்கள்.

களம் 5.

மகரிஷிகள் துவாரகா பிரவேசம் :
கிருஷ்ண பரமாத்மா அந்தப்புரம்.

கிருஷ்ணபரமாத்மா ருக்மணிஸத்யபாமையுடன் சொக்கட்டான் ஆடிக்கொண்டிருந்தார். சேவகர்மூலமாய் மகரிஷிகளின் வரவைத் தெருவிக்க உள்ளே வரும்படிசெய்து மரியாதைசெய்துவிட்டு வந்தவிஷயத்தைக் கேட்கலாகினர். நாரதர் உள்ளபடிசொல்லி இனிதாங்கள் அந்த மகாபாபியை உயிருடன் வைப்பீர்களாகில் நாங்கள் ஜீவிக்கத்தக்கதல்லவென முறையிட்டார். கிருஷ்ணபரமாத்மாவுக்கு கோபாவேசம் உண்டாகி அந்ததுராத்மாவை கொன்றுவிட எண்ணி சித்திரசேனனின் சிரசை மூன்றுதினத்தில்வாங்கிவிட தன் சக்கிரமென்னும் ஆயுதத்திற்கு ஆக்யாபித்துவிட்டார். நாரதர் காலவரிஷியை அவர் ஆச்ரமம் செல்லும்படி சொல்லித் தானும் புறப்பட்டுவிட்டார். அவ்வாரே சக்கிரமும் கிளம்பிவிட்டது. நிற்க,—ரதாபிருடனாக ஆகாசமார்க்கமாய்ப் புறப்பட சித்திரசேனன் தேவலோகம் அடைந்தான். அதிக உல்லாஸத்துடன் தன் ரஜாநாள்பாக்கியை கழித்துக்கொண்டு வந்தனன்.

சித்திரசேனன் அரண்மனை : நாரதர் பிரவேசம்.

கிருஷ்ணபரமாத்மாவை விட்டகன்ற நாரதர் தம்பூரும் கையுமாய் சித்திரசேனனிடம் அடைந்தார். அதிக மரியாதை செய்தான் சித்திரசேனன். ஏதாகிலும் விசேஷமுண்டோவெனக் கேட்க, நாரதர் தேவலோகத்தில்யாதொருவிசேஷமுமில்லை யென்றார். சித்திரசேனன் பூலோகத்தில் இருப்பதுபோல் தோன்றுகிறதே வெனக் கேட்க,

வேறு ஒன்றுமில்லை, கேளு சொல்லுகிறேன். ஆனால் இது உனக்கு சம்மந்தமன்று, இருந்தாலும் கேட்டபின்சொல்லாமலிருப்பது தர்மமன்று எனப் பீடிகைபோட்டு, கேளு, சித்திரசேனா! பூலோகத்தில் யமுனா நதிக்கரையோரத்திலுள்ள காலவரிஷி யாச்ரமத்திற்கருகே யாரோ ஒரு புமானும். அவன் பத்னியோடு வந்தானும். யமுனாநதியில் ஜலக்ரீடை செய்தானும். "அது ஸகசந்தான், கிருஷ்ணன் செய்பவில்லையா?" இருந்தாலும், அதன்பிறகு ககனமார்க்கமாய்ப் போனானும். அப்போது காலவரிஷி அர்க்கியம்விட கையில் ஜலத்தை வைத்துக்கொண்டு மந்திரம் ஜபித்தனராம். அப்போது ஆகாயத்தில் சென்றவன் தன் வாயிலுள்ள தாம்பூல உச்சிஷ்டத்தை உமிழ்ந்தானும். அது ரிஷியின் கையில் 'விழ்ந்ததாம். (நிருத்தும், நிருத்தும், யார் கையில் விழுந்தது என சித்திரசேனன் திடுக்கிட்டு கேட்டனன்.) உனக்கேன்டா பயம். ஆகாயத்தில் போனவன் எச்சிலை உமிழ்ந்தானும். (அப்புரம் என்ன மாச்சுது என்று சித்திரசேனன் திணரிக்கொண்டு கேட்க,) நாரதர் அப்புரமா! மடப்புரம்தான். கேளு, உடனே கிருஷ்ணனிடம் ரிஷி சென்றாராம். ஒன்றையும் விசாரிக்காமல், பொண்டாட்டி மயக்கத்தால் கிருஷ்ணன் அநியாயமாய் தன் சக்கிரத்தைக்கொண்டு நிரபராதியான ஜலக்ரீடைபண்ணினவன் சிரசை துண்டித்துவிடும்படி ஆக்ஞாபித்துவிட்டாராம். நெஞ்சை வலிக்கிறது. உனக்கு எதைவேண்டி இந்தக்கதை. நீயோ தெய்வமேயென்று தேவலோகத்தில் இருக்கிறாய். எவனோ தடியன் செய்தானும். குருட்டு ராஜா சிரசாக்கினை செய்யச் சொன்னாராம். நீதி எது, சட்டமேது. நீதி அநீதிதான்; சட்டம் புனுகு சட்டந்தான். என்னமோ நடக்கிறது. இந்த எழவெல்லாம்

என்காதில் விழுந்துவிடுகிறது சனி. உனக்கேதுக்கு இந்தக் கதை என்று சொல்லிக்கிளம்பினர். விழுந்தான் சித்திர சேனன் பூமியில். அலறினன் வாய்கொள்ளாது. புரண்டான் காலுபக்கமும். மிரண்டான் கிருஷ்ணனின் சக்கிரத்திற்கு. ஹா! என் செய்வேன் எனச் சொல்லவே, நாரதர் ஒன்றும் அறியாதவர்போல் அடே, சித்திரசேன உனக்கேண்டா இந்த காபரா எனக்கேட்க,

சித்திரசேனன் :—ஸ்வாமி, நான்தான் சென்றவன், ஜலக்ரீடை செய்தவன், எச்சிலே உமிழ்ந்தவன், சாகப்போகிறவனும் நானேதான் என்று அலறினன்.

நாரதர் :—நீயா! புளுகாதேடா. என்னே உடாக்கிருயே. நீயா போனவன். அப்படிப்போனுலும் எச்சிலே உமிய மாட்டாயே. எதற்குடா பரிகாசம் செய்கிருய்.

சித்திரசேனன் :—ஸ்வாமி, நான் உயிருக்கு மன்ருடுகையில் நான் பரிஹசிப்பதாகச் சொல்லுகிறீர். சக்கிரமோ புறப்பட்டுவிட்டதாகத் தெரிவிக்கிறீர். நான் என்ன செய்வது எனச்சொல்லி, தேவேந்திரனிடம் தெரிவித்துத் தப்ப வழிதேடுவதாகப் புறப்பட்டான், நாரதருக்கோ தன்னே ரக்ஷிக்கும்படி கேழ்க்கவில்லேயே என்ற கோபம் அதிகரித்து தான் சும்மா இருந்துவிட்டார். தேவேந்திரனிடம் உள்ளபடி சித்திரசேனன் தெரிவித்துத் தன்னே ரக்ஷிக்குமாறு வேண்ட, தேவேந்திரன் திடுக்கிட்டு, அப்பா சித்திரசேன, சங்கதியைக் கேட்டதில்லே போறும். இருந்தாலும் சொல்லுகிறேன்.—

பகா சத்யசிந்தனும், அதிபராக்ரமசாலியும், துவாரகாபுரிநாதனுமான கிருஷ்ண பரமாத்மாவின் இருசரணங்

கனேயும் பிடித்துக்கொண்டு என்னேயும் ரக்ஷிக்கும்படி வேண்டினேன். எப்படிப் பிரார்த்தித்தேனெனத் தெரியுமோ.—

நன்னுதய சூடரா நரஹரி ஸ்ரீதரா
நின்னுவினு அன்யதெய்வ மெவரு லேதுரா
கோவர்த்தன பர்வதமு கோரிச்சே நாட்டிநாடே
கோடி கோவுலநேல கோபால கிருஷ்ணுடய்யா
இவரா ஜெவ்வருத யிதுஸமய முகாதா
ஸர்வலோக சரண்ய நன்னுரக்ஷிம் பவய்யா.

அதாவது: ஓர் சமயம் கோகுலத்தில் யாதவர்களால் கோவர்த்தன பர்வதத்தடியில் எனக்காகப் போட்டுவந்த பூஜையை கிருஷ்ணன் தனக்குச் செய்யும்படி கேழ்க்க, அவர்களும் அதற்கிணங்கி அப்பூஜையை கிருஷ்ண பரமாத்மாவுக்குச் செய்தார்கள். இது செய்தியை யான் அறிந்து அக்கிருஷ்ணனுக்கு விரோதமாய் அக்கோபிகர்ளுக்கு தீங்குசெய்யவேண்டி, வருணனே ஆக்யாபித்து தாங்கப்படாத வருஷத்தை வருஷிக்கும்படி ஆக்யாபிக்க, வருணனும் அவ்வாறே செய்தனன். யாதவர்கள், கோக்கள், கன்றுக்குட்டிகள், கோபிமார்கள் எல்லோரும் மழையின் வேகத்தைப் பொருக்கமுடியாமல் கிருஷ்ணனிடம் முறையிட, அதற்குக் கிருஷ்ணன் கோவர்த்தனம் என்னும் பர்வதத்தை அடியோடு பிடுங்கி, அக்கோகுலத்திற்கு ஓர் குடைபோல் பிடித்து என்னேயும் வருணனேயும் அவமானப்படுத்தினர். அப்பேர்க்கொத்த மகா பராக்கிரமசாலியும், லோகேஸ்வரனுமான கிருஷ்ணனின் சக்கிரத்தை யான் தடுக்க வல்லவனு? வெகு நேர்த்திதான். தேவராஜன் என்று சொல்லிக்கொண்டிருப்பது உனக்கு மனமில்லேபோலிருக்கிறது. என்னிடம் பேசியது ஒருவரும் அறியாதபடி ஓடிவிடு. வெளியில் தெரிந்தால்,

ராஜாவை உடனே சூஜாவாக வார்த்துவிடுவர். வெளியில் ஓடிவிடு எனச் சொல்லிவிட்டான். இதுகேட்ட சித்திரசேனன் பரமசிவனிடம் சென்றனன். அவரை வணங்கி நடந்த ஜலக்ரீடை சங்கதியை உள்ளபடி உரைக்க, பரமசிவனுக்கு அதிகோபமுண்டாகி அடே பாபி! எவன் விஷ்ணு த்வேஷியோ, அவன் எனக்கும் த்வேஷிதான். எவன் என் பக்தனோ, அவன் விஷ்ணுவுக்கும் பக்தனென அறியாது இங்கு வந்தனை. கிருஷ்ணனின் சக்கிரம் உன்னைத் தேடி வந்து சிரச்சேதம் செய்வதற்குமுன், நானே உன்னை சம்ஹரித்து விடுகிறேன் என்றுசொல்லி, ஆயுதமான சூலத்தை எடுக்கையில், சித்திரசேனன் எடுத்தான் ஓட்டம், பிடித்தான் பிர்ம்மாவின் காலை. நடித்தான் அதிபக்தன்போல். துடித்தான் தன் உயிரைவேண்டி. பிர்ம்மாவோ சிருஷ்டிக் கர்த்தனானபடியால், சித்திரசேனா! நீ என்னைவேண்டி யாது பயன், விஷ்ணுவின் ஆக்ஞைக்கு மாருபாடாக நான் ஒன்றும் செய்யத்தக்கதில்லையெனமொழிய சித்திரசேனனுக்கு ஒன்றும் தோன்ருமல், இலை அசைகிற சப்தம் கேட்டாலும் சக்கிரம் தானோ வென்றபீதியோடு மற்றுமுள்ள பல தெய்வங்களான வீறன், இருளன், காட்டேரி, வெறியன், நொண்டி, சாமுண்டி, தூரி, தூண்டி, நல்லண்ணன், தொட்டியசின்னன், பெத்தண்ணன், மாரி, முனியன், பாவாடை, சங்கிலி, குழியரிசி முதலான தெய்வங்களையும் பிரார்த்தித்தான். ஒன்றும் பிரயோசனப்படவில்லை. எப்படி ஸ்ரீராமபிரான் கானகத்தில் தன் பத்னியான ஜானகியின் மடியில் படுத்து நித்திரை செய்யும்போது, நித்திரையை பங்கம் செய்யாமல் பாதுகாத்துவந்த ஸீதாதேவியின் ஸ்தனத்தை காகாசுரனனவன் தன் மூக்கினல் இரத்தம் பெருகும்படி செய்ததை யறிந்த ஸ்ரீராமபிரான் அத்துஷ்டனை நிக்ரகம்

செய்யும்பொருட்டு, தன் பாணத்தை பிரயோகிக்க, காகாசுரன்,

"பத்தி முதலாமவத்தில் பகைவனுக்குக் கூடாமல்
எத்திசையு முழன்றோடி இளைத்துவிழும் காகம்போல்.
சடைமுடியன் சதுர்முகனென்னு இவர்முதலாம் தரமல்ல
அடையவனைப்பயனுமி அழிந்துவிடும்படி கண்டு."

த்ரிலோகமும் சஞ்சரித்து பிரும்மா, விஷ்ணு, சிவன், மூவராலும் தகாத காரியமென அறிந்து எப்படி ஸ்ரீராமன் பாதத்திலேயே வந்து விழுந்தனனோ, அவ்வாரே சித்திரசேனனும் தன்னால் ஒன்றும் செய்யமுடியாமற் நாரதர் பாதத்தில் வீழ்ந்து பணிந்து தன்னை ரக்ஷிக்குமாரு வேண்டினன். நாரதர் சித்திரசேனனைப் பலவாராகப் புத்திபுகட்டிக் கடைசியாக ரக்ஷிக்கிறேன் என வாக்களித்து அவனை ஸ்வஸ்தானத்திலேயேயிருக்கும்படி செய்துவிட்டு அதற்கு வேண்டிய ஏற்பாட்டை செய்யப்புரப்பட்டனர். புரப்பட்ட நாரதரை சித்திரசேனனின் பத்துஸ்திரிகளும் நமஸ்கரித்துத் தங்களுக்கு மாங்கல்யம் கொடுக்கும்படி பிரார்த்தித்தும் தங்களுக்கு தெரியா வண்ணமாய் தங்கள் நாதனுக்கு கேடுவிளைவித்தனர்களென்றும் தெரிவித்து க்ஷமித்துக் காப்பாற்றுமாரு பிரார்த்தித்தார்கள்.

களம் 6.

சித்திரசேனன் பத்னிகளின் சம்பாஷணை

பத்மதளா:—ஹே! விராஜினி! என்னடி நம் பர்த்தாவின் சரீரம் அதிக மெலினமாகவும் வதனம் வாடியுமிருக்கின்றது.

விராஜினி:—நான் என்னவென்ன எடுத்துரைப்பேனடி. "ஸ்திரீ புத்தி: ப்ரளயாந்தகா" என்றபடியாகிவிட்டது.

நாதன் எப்போதும் போலிராமல் நம்மை ஸந்தோஷிக்கும்பொருட்டு யமுனாதீரம் செல்லவும் அங்கு நம் இச்சைக்கிசைந்து நம்மை கோபஸ்திரீகள்போலவும் தன்னை ஸ்ரீ கிருஷ்ணனாகவும் நினைத்து ஜலக்கிரீடை செய்யவும், ககனமார்க்கமாய்ச் செல்லும்போது நம்மால் அளிக்கப்பட்ட பான்ஸுபாரிகளை மென்று அதன் உச்சிஷ்டத்தை பூமியில் உமியவும், அவ்வுச்சிஷ்டமானது ரிஷியின் அர்க்கிய உதகத்தில் விழவும், தன்னிமித்தமாய் மகரிஷி கிருஷ்ணபரமாத்மாவிடம் சொல்ல அவர் ஞானக்ருதமா, அக்யானக்ருதமாவென யோஜியாது நம் ப்ராணநாதனை சிரச்சேதம்செய்யுமாறு தன் சக்ராயுதத்திற்கு ஆக்ஞைசெய்யவும், அதை அறிந்த நம் பர்த்தா திகிலடைந்து எங்கிருந்தவிப்பதினால் சரீர இளைப்பும் வதனச் சோர்வு முண்டாகி இருக்கிறது. இவ்வளவு காரியங்களுக்கும் நாமே காரணமாகவிருக்கிறோம். எந்தப்பூமானும் ஸ்திரீகளாலேயே மானஹானி, சரீர தண்டனை; கடனாளி, மரண தெண்டனை; ப்ராணத்யாகம், த்ருவ்ய நஷ்டம, மாத்ஸல்யம, அஸத்யம், முதலான அனேக இம்ஸைகளுக்கும், பாபகாரியங்களுக்கும் உள்ளாகுகிறார்கள் என்பது நிச்சயம். அனேக ஸ்திரீகள் தன்கணவனை ஒருவேலையாளியைப் போல்வைத்து ஆக்ஞைசெய்வதும் தனக்குவேண்டிய எவ்வித ஸுகங்களையும் அவனைக்கொண்டு செய்துகொள்வதுமாக விருந்துவருகிறார்கள். கணவன் எவ்வளவு ஹீனஸ்திதியிலிருந்தாலும் அதை கவனியாது தன் மனம்போனபடிக்கெல்லாம் ஆட்டிவைக்கிறார்கள். தன் பத்னியை ஒருவாறு திருப்தி செய்யும்பொருட்டோ அல்லது தன் குழந்தைகுட்டிகளின் வாஞ்சையா

லோ தன் பெண்டீரின் மனங்கோணுமல் பொய்சொல்லியும், நர்த்தானம், துஷ்க்ருத்பம்செய்தும், பாபமான காரியத்தில் பிரவேசித்தும், களவும் கொலையும் செய்தும், மானஹானியாய் பிறரிடம் ஊழியஞ்செய்தும், ஸம்பாதனம் செய்து மகாலண்டியான தன் பத்னியின் மன்தைத் திருப்தி செய்விக்கிறுன். ஈசன் எதற்காக வேண்டி இந்தமகாபாதகிகளே சிருஷ்டித்தனனே அறிகிலேன். நல்ல உத்தம புருஷர்களுக்கு தர்மத்திற்காகவும், சரீர சௌக்கியத்திற்காகவும், பிரஜாவிருத்திக்காகவும், இல்லரத்தை சரிவரப் பாதுகாத்து தன் பர்த்தாவுக்கு சிச்ருஷை செய்வதற்காகவும் படைக்கப்பட்ட ஸ்திரீ ஜென்மமானது அப்புண்ய புருஷனை தீத்தொழிலில் பிரவேசிக்கும்பொருட்டும், இவர்கள் இச்சையைப் பூர்த்திசெய்துக் கொள்ளும் பொருட்டும் சிருஷ்டிக்கப்படவில்லை. இப்பேர்க்கொத்த ஸ்திரீகளை "மமதர்மபத்னீஸ:" என வழங்க நியாயமுண்டோ? புமானுல் செய்யப்படும் எவ்வித புண்யத்திலும் ஸமபாகத்தை அவன் அனுமதியன்றியே அடைந்து, ஸ்திரீகளால் செய்யும் எவ்விதபாபங்களுக்கும் இவன் உள்ளாகுகிறுன். இது என்ன அனியாயம். கணவனின் மனதை எக்காலத்திலும் வருத்தத்திற்கு உள்ளாக்காமலும், பதிவிற வேறு தெய்வமில்லையெனவும், எவ்வித நல்லுலகமும் நாடப் பதியே காரணமெனவும் நினைக்கும் ஸ்திரீயல்லவோ 'தர்மபத்னீ' என்று சொல்லலாம். ஹா! என்ன அனியாயம் செய்துவிட்டோமடி. அற்பசுகத்திற்கு வேண்டி, ஆயுள் பரியந்திரம் அமங்கல்யத்தையும், அதன்பின் மருஜென்மாவில் கீழ்க்கடையையும் அடையும்படி நேர்ந்துவிட்ட

தே. நமக்கு எவ்வுலகம் கிடைக்கும். வேதாள உலகமேயல்லாது, நல்லுலகம் நாடுவது கிட்டாத காரியமன்றோவெனத் துக்கித்து எல்லோரும் நாரதர் பாதத்தில்ப்பணிந்து, தங்கள் மாங்கல்யத்தைக் காக்கும்படி வேண்டினார்கள்.

களம் 7

நாரதர் ஸுபத்ரை அரண்மனை பிரவேசம்.

எங்குபார்த்தாலும் பசும்புற்கள் அடர்ந்தும், மரங்களின் கேசங்களான இளம்துளிர்களை விரித்துத் தொங்கவிட்டுக்கொண்டும், வெண்ணிலாவானது அதிமனோரத்தைத்தரத் தக்க குளிர்ந்த ஜோதியோடும், அனேக பெண் பறவைகள் தங்கள் தங்கள் நாயகனோடு அன்று நடந்த ஸமாச்சாரங்களை கேழ்ப்பதும் அதிக உல்லாஸமாய்க் கொஞ்சிக்குலாவும் சப்தம் காதுக்கும் அதிரம்யமாயுமிருக்கும் பூமியையும் அதன் மத்தியில் ஓர் அரண்மனையும் அவ்வரண்மனைக்கு எதிரில் ஓர் சிறு தடாகமும் அத்தடாகத்தைச் சுற்றிப்பலஜாதி புஷ்பத்தோட்டமும், அத்தோட்டத்தின் சுற்றுப்பக்கலில்ப் பலஜாதி பலவிருக்ஷங்களும், இருக்கக் கண்டார். நிச்சப்தமாய் இருந்தது. இதுவே வைகுண்டமோ, வெனப்ரமித்தார். அரண்மனையில் வாயல்க்கதவைத் தட்டினார். உள்ளே இருந்து மெல்லிய தொனியோடு யார் அங்கு என பதில் வசனம் கேழ்க்கப்பட்டார். தன் பெயரைச்சொன்னதும் கதவு திறக்கப்பட்டது. நாரதரென அறிந்து சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து, ஆஸனம் கொடுத்து வந்த காரணம் யாதுவெனக் கேட்டாள் ஸுபத்ரை. (அர்ஜுனன் பத்னீ)

நாரதர்:—ஸுபத்ரை என்ன ஒரு மாதிரியாகவிருக்கிறாய், அர்ஜுனன் எங்கு சென்றிருக்கிறான் எனக்கேட்டார்,

ஸுபத்ரை :—ஸ்வாமி ஒன்றும் விசேஷமில்லை. எப்போதும் போல் தானிருக்கிறேன்.

நாரதர் :—ஸுபத்ரே நீயே அதிர்ஷ்டசாலி. உன்யோகமே யோகம். என்ன அழகு. என்னகுணம், என்ன அதிர்ஷ்டம். என்ன கௌரவம், என்று தன் தோரணையைத் தொட்டுக்கொண்டார்.

ஸுபத்ரை :—நாரதரே! தாங்கள் உள்ளவறையில் எனக்கு என்ன குறைவு. எப்போதும் இப்படியே இருக்கும்படி ஆசிர்வதிக்கவேணும். இருக்கட்டும் எங்கிருந்து வருகிறீர். ரொம்பவும்களைப்பாகக் காணப்படுகிறதே சொல்லக்கூடாதா? என்னைக்கண்டால் உமக்கு எப்போதும் அலக்ஷியம்தான். நான் தங்கள் முகத்தில் விழித்தவேளை, உம்மபேரில் பிசகென்ன.

நாரதர் :—ஸுபத்ரே! என்ன ஒரே ஓட்டலாக ஓட்டிவிட்டாய். உன்னிடத்திலா எனக்குப்பிரியமில்லை. நீ தான் சோல்லுகிருயோ வேருயாராவது சொல்லச்சொன்னுர்களா? இலங்காபுரிக்குச் சென்றிருந்தேன். அதன்பின் த்வாரகைக்கு சென்றிருந்தேன். அவடமிருந்து உன்னைப்பார்த்துவிட்டுப் போவோமென எண்ணி வந்தேன்.

ஸுபத்ரை :—த்வாரகையில் என்ன விசேஷமோ?

நாரதர் :—சொல்லத்தான் வேண்டுமோ?

ஸுபத்ரை :—பார்த்திரா, உம்மவஞ்சனையை எனக்குத்தெரியாமலா சொன்னேன்.

நாரதர் :—ஸுபத்ரே வேரு ஒன்றுமில்லை. த்வாரகையில் கிருஷ்ணனின் பத்னி ஸத்தியபாமையைக் கண்டேன்.

அவளோடு வெகுநாழிகை பேசுகையில், தான் எப்போதும் எந்த ஜென்மாவெடுத்தாலும், இந்த கிருஷ்ணனுக்கே விவாகிக்க வேண்டுமெனவும், பலராமர் மைத்துனனுகவே இருக்கவேண்டுமென்றும், த்வாரகையே நம் ராஜ்யமாக விளங்கவேண்டுமென்றும், எப்போதும் பாரிஜாதமலர் புஷ்பித்துகொண்டே இருக்க வேண்டுமென்றும், உம்மைப்போலொத்த மகரிஷிகள் அனுதினமும் கண்டுகொண்டு போகவேண்டுமெனவும்; இன்னம் எத்தனையோ விதம் எல்லாம் சொல்லி அதற்கு இந்த ஜென்மாவிலேயே செய்துகொள்ள எதாவது ஸங்கல்பமோ, மந்திரமோ, ஹோமமோ, தானங்களோஉண்டோவென்று என்னைக்கேட்டாள். அதற்கு வழி இருக்கும்போது அதை ஒளிக்க எனக்கு மனமில்லாமல் யமுனு நதிக்கரை அவளுடன்சென்று, சில மந்திரமும் ஜீவதானமும் (உயிர்ப்பிச்சை) கொடுக்கும்படிசெய்து, அவள் எண்ணத்தைப் பூர்த்திசெய்து வைத்து இவடம் வந்தேன். வேரு ஒரு விசேஷமுமில்லை என்ருர்.

ஸுபத்ரை :—நாரதரே உம்ம வஞ்சனை நெஞ்சை அண்டத்துவிடும். தில்லுமுல்லு என்ருலும் உம்மசரி விடுவதில்லை. அவ்விதம் மருஜென்மாவுக்கு அர்ஜுனன் என் பதியாகவும், தர்மபுத்திரர்கள் என் மைத்துனர்களாகவும், குந்தி என்மாமியாகவும், கிருஷ்ணன் என் புருஷனுக்கு ஆப்தபந்துவும் சினேகமாகவும், துர்யோதனுதிதோற்று அஸ்தினுபுரம் எங்கள் ராஜ்யமாகவும், எற்பாடு செய்துவைக்க உமக்கு எண்ணம்வரக்கூடாமோதா? அவள்தான் உமக்குச் சாதிக்கிருளோ? என் என்க்கு முதலில் செய்துவைத்தபின் அவளுக்குச் செய்து வைக்கக்கூடாது.

நாரதர் :—குழந்தாய், நீயோ சிறுசு. அதிலும் யௌவனம். அர்ஜுனனோ அதற்குமேல்தான். அரை நிமிஷமே னும் அவன் உன்னைவிட்டுப்பிரியவோ அல்லது நீதான் அவனைவிட்டுப் பிரியவோ மனம் ஒவ்வாது. அந்த விருதம் எடுக்க ஒரு தினத்தில் 20 நாழிகைவரையில் அன்னமில்லாமல் உபவாசமாயிருக்கவேண்டும். காரி யத்தைப் பார்த்தாலோ வெகு சுலபம்தான். ஆனால், சிரத்தைவேண்டும் அச்சமயத்தில் புருஷனையாவது வேறு எவ்விதக் கவலையாவது உதவாது. இதற்கிண ங்க, உன் மனம் ஒன்றுதென நினைத்து அவளுக்குச் செய்துவைத்தேன். உனக்கு மாட்டேனென்று சொ ன்னேனா? உன்னைக்காட்டிலும் அவள் பெரிதா. அ சடே, இப்போதே செய்யமுடியாதா? இருக்கட்டும் உன் புருஷன் காதில்பட்டால், என் தாடிக்கும் உன் தலைமயிருக்கும் முடிந்து விரட்டிவிடுவானே. அதை நன்குயோசித்துச் சொல் என்றார்.

ஸுபத்ரை:—ஸ்வாமி அவர் ஊரிலில்லை. வருவதற்கு ஒரு தினம் பிடிக்கும், அதற்குள்செய்யுமே. நானும் தயா ராகவிருக்கிறேன், ஆசைவார்த்தை காட்டிவிட்டு ஓட் டைத் தம்பூருடன் ஓடிப்போகாதேயும் என்றாள்.

நாரதர்.—ஆனால் பஞ்சாங்கம் கொண்டுவா பார்ப்போம் என் றார். கொண்டுவந்துகொடுத்தாள் ஸுபத்ரை. பார்ப் பதுபோல் பஞ்சாங்கத்தைப் பார்ப்பதும் தலையை அசைப்பதும் ஏதோ எண்ணிக்கைத் தவறியதுபோல், மறுபடியும் விரலைவிடுவதும், மடக்குவதுமாயிருந்து, கண்ணே உன் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம். விடிந்தால் நல்லநாள். அதுவும் 20நாழிவரையில்த்தானிருக்கிறது.

அதற்குள் முடித்துவிடலாம். அதிக சிலவுமில்லை, உன் அபிப்பிராயத்தைச் சொல் எனக்கேட்டார். உடனே நாரதர் ஸுபத்ரே நில்லு, நில்லு, ஓ ஹோ! ஹோ! தேவலோகம் போகவேண்டுமே. இன்று அங்கு ஸதஸு ஆச்சுதே என்றுசொல்லிக்கொண்டார்.

ஸுபத்ரை:—இந்தாருங்காணும் நாரதரே? உம்ம திருகு தாளமெல்லாம் வேண்டாம். உமக்கு தேவலோகத்தில் வெகுகாரியமோ? என்னையும் கிளப்பிவிட்டீர், நீரும் போகவேண்டுமென்றால் இதெல்லாம் உம்ம வேலைத்தனமோ? இருக்கட்டும் இதுமுடிந்து போகலாம் என்றாள்.

நாரதர்:—அதற்கில்லை. இங்கும் முடிக்காமல் அங்கும் போகாமல் இருப்பது தகுதி இல்லையென்றுதான் சிந்தித்தேன். நீ நிச்சயமாயிருந்தால் தேவராஜன் தான் ஆகட்டும் அவனப்பன்தா னாகட்டும் உன்னைக்காட்டிலும் பெரிதோ. என்ன! என்ன! என்று தாடியை உருவிக்கொண்டு ஒருதரம் தம்பூரை வேரு இடத்தில் அதிக கோபத்தோடு நகற்றுவதுபோல் செய்தார்.

ஸுபத்ரை:—நாரதரே! இப்போது நாழிகை ஆகிவிட்டது. ரதத்தைக்கட்டிக்கொண்டு கிளம்பினால் பலபலவென்று பொழுது விடிந்ததும் யமுனையை அடையலாம். நீர் இருக்கையில் எனக்கென்ன பயம்.

நாரதர்:—என்னது! பயமா இதோ பார்த்தனையா தம்பூரோடு ஒரே போடுதான் தெரியுமா.

ஸுபத்ரை:—தம்பூரால் போட்டீரோ தவடுபொடிதான், தம்பூரின்கெதி. பெருத்த வஜ்ராயுதமோ? காண்டீப

மோ? அதைச் சொல்லாதேயும். உம்ம தபோபலத்தைச் சொல்லும். எவரையும் சாம்பலாக்க வல்லவரென மொழியும் என்றாள். ஆனால்சரி ஏற்பாடுசெய்யலாமா?

நாரதர்:—பூர்வாங்கம் அதாவது பிரயாணஸங்கல்ப்பம் செய்யவேண்டும். ஸ்னானம் செய். கொஞ்சம் தீர்ப்பம் கொண்டு வருகிறேன் என்று சொல்லிவிட்டு வெளியில் புறப்பட்டார். ஸுபத்ரையும் வென்னீருக்கு ஆக்யாபித்துவிட்டாள். சேடிகளும் தயாரித்தார்கள். வெளிக்கிளம்பினர் நாரதர். அப்பா இந்தத் தடிப்பயலுக்கு எவ்வளவு வேலைவிடவேண்டி இருக்கிறது. தடியன் பெண்டாட்டிகளோடு யமுனைக்குத் திண்டாடப்போக எனக்கல்லவோ பெரும்பாடாக ஆகிவிட்டது. காலவரிஷியைக் கிளப்பிவிட்டோம். கிருஷ்ணனையும் கிளப்பினோம். இவனுக்கும் மருந்து பிடித்துவிட்டது. இனி அந்தத் தடியனைக் கொப்பிவரவேண்டுமே என்று சொல்லிக்கொண்டு அதிவேகமாய் தேவலோகம் சென்று, சித்திரசேனனை அழைத்துக்கொண்டு, யமுனா நதிக்கரைக்கு அருகாமையிலுள்ள பெரிய விருக்ஷத்தின் பொந்தில் மறைத்து வைத்துவிட்டு, அவனிடத்திலேயும், நாளைபகலில் மணி 1-க்கு ஒரு ஸ்திரீ எவராவது யாசகர்கள் உண்டோவென்று கேழ்ப்பாள். உடனே, ஓடிவந்து தரவேணும், தரவேணும் என்றுசொல்லு, அவளும் தந்தேன் என்பாள். உடனே உயிர்ப்பிச்சை வேண்டுமென்றுசொல். அதற்கும் தந்தேன் என்பாள். உடனே நான்வந்து பார்த்துக்கொள்ளுகிறேன் என்று சொல்லிவிட்டு அவனையும் அந்த மரப்பொந்தில் ஆந்தையைப்போல் அடைத்துவிட்டு ஸுபத்ரையிடம்

அதிவிரைவாக சிலதெர்பை (நாணப்பில்) எடுத்துக் கொண்டு வந்து சேர்ந்தார். ஸுபத்ரையும் ஸ்னானம் செய்து பட்டு உடுத்திக்கொண்டு நாரதரைக்காணுமே, என்ற விசாரத்தோடு நின்றுகொண்டிருந்தாள். வந் தார் நாரதர். நமஸ்கரித்தாள் ஸுபத்ரை. எங்கு சென்றீர் என்றாள். ஒன்றுமில்லை, வஸிஷ்டரைக்கண் டேன். உனக்கு நடத்தவேண்டிய விஷயத்தையும் சொ ன்னேன். உனக்காக அவர் அனுக்கிரகத்தையும் செய் யச்சொன்னேன். உனக்காக எவ்வளவுபாடு என்கி ருய். ஸத்தியபாமைக்கு இவர் அனுக்கிரகமில்லை. இது உனக்கு மேல்தான். இதுவும் உன் அதிர்ஷ்டம்தான். நல்லகாலத்திற்குத் தக்கபடி எல்லாம் வருகிறது என் ருர். ஸுபத்ரைக்கு புன்னகைகொண்டது. ஸங்கல்ப்ப முடித்தார். உடனே ஒரு சேடியோடு நாரதர்ஸகிதம் யமுனையைநோக்கிப் புறப்பட்டார்கள். அவடம் சென் றதும், ஸுபத்ரே கேளு? சொல்லுகிறேன். இக்கா லத்தில் எத்தேசமும் ஸுபிக்ஷமாகவிருப்பதால் ஏழை கள் என்பதே கிடையாது. அப்படிக்கிருந்தாலும் அரசர்களாலும் தனவான்களாலும் ஆதரிக்கப்பட்டு வருகிறது. நமக்கோ பிராம்மண ஏழை ஒருவன் தானம் இப்போது வாங்கவேண்டும். அகப்படுவது கஷ்டம். அதிலும் இந்த நதிக்கரையில் கிடைப்பது அரிது. மேலும் நாம் யாசகனை அழைப்பதோ 15 நாழிகைக்குமேல். அப்போது அகாலம். கிடைத்தால் உன் அதிர்ஷ்டம்தான். ஸத்தியபாமை அதில் ரொம்ப அதிர்ஷ்டமுள்ளவளாக ஆகிவிட்டாள். இன்னமும் கேள். ஸங்கல்ப்பமும் முடிந்தவுடன் எவராவது நிரு னாயும் பரம ஏழையாயும், யாசகத்திறகு உண்டோ,

என்றுபலயாய்க்கூப்பிடு. உன் அதிர்ஷ்டம்போல் நடக்கட்டும், அனேகமாய்க்கிடைக்காது. கிடைத்தால் நிரந்தான் என்று பேதிக்குக்கொடுத்தார் நாரதர். ஸுபத்ரையும் யமுனாநதியில் ஸ்நானம்செய்து வெண்பட்டுக்கட்டிக்கொண்டு ஸங்கல்பத்திற்கு மணி 12-க்கு ஆரம்பம்செய்து ஸங்கல்பமும் மணி 2-க்குமுடிந்தது. நாரதர் உடனே அம்மணி நான் இவடமிருக்கக்கூடாது. சற்றுவிலகியிருக்கிறேன். கெட்டியாய்க்கூப்பிடு என்று உரைத்துவிட்டு, 10 அடி அப்புரம் நின்றார். ஸுபத்ரையும் உடனே கெட்டியாக எவராவது யாசகர்கள் உண்டோ. எவராவது யாசகர்கள் உண்டோவெனக் கூப்பிட, மரப்பொந்தில் மறைந்திருந்த சித்திரசேனன் அதிவேகமாய் ஓடிவந்து நமஸ்கரித்து தரவேண்டும், தரவேண்டுமெனக் கேட்டான். நாரதரும் அதிருஷ்டசாலி, அதிருஷ்டசாலி கிடைத்துவிட்டான்பிராமண யாசகன். உன் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டமென்றார். உடனே ஸுபத்ரையும் தந்தேன், தந்தேன் என்றாள். யாசகன் உயிர்ப்பிச்சைத் தரவேண்டுமெனக் கேட்க, ஸுபத்ரை நாரதர் முகத்தைப்பார்க்க, நாரதரும்ஐயோ! என்னசெய்வேன். வந்தவன் கோபாவேசங்கொண்டு போய்விடப்போகிறானே, என்று அவர் ஸமீபம்சென்று முணுமுணுத்துக்கொண்டு கண்ஜாடையாலும் கைஜாடையாலும் கொடுத்துவிடு கொடுத்துவிடு என்ற அர்த்தத்தைக்காட்டிய ஜாடைபோல் கைஜாடையையும் கண்ஜாடையையும் காட்டினார். ஸுபத்ரை இதை அறிந்து தந்தேன் தந்தேன் என்றாள். பிக்ஷுகனும் விலகினான். ஸுபத்ரையும் ஆகாரம் உண்டு நாரதரைக் கூப்பிட, நாரதர் சற்று தயங்கினார். பிக்ஷுகன் சுபத்

ரையிடம்சென்று நான் எங்கேசெல்வேன். என் உயிருக்கல்லவோமோசம்வந்திருக்கின்றன எனச்சொல்ல, அது என்னவென ஸுபத்ரை கேட்க, ஆதியோடந்தமாய் சித்திரசேனன் சொல்ல, ஸுபத்ரை நாரதரைப் பார்த்தும் நாரதர் தான் ஒன்றும் அறியாதவர்போல், ஸுபத்ரை முகத்தைப் பார்ப்பதுமாயிருந்து, கடைசியாக ஸுபத்ரை நாரதரை அழைத்து இதற்கு என்ன செய்வது கிருஷ்ணன் ஆக்யைமீறி நான் என்ன செய்ப முடியும். இதை என்கணவன் கேட்டால் இப்போதே என்னை யமபுரிக்கு தன் காண்டீபத்தால் அனுப்பிவிடுவாரே. இவனோ நம்மை விடமாட்டான் போலிருக்கிறது. என்னசெய்வது. நீர்தான்யுக்திசொல்லவேண்டுமெனக்கேட்க, நாரதர் ஐயோ, இந்த இழவுதான் வேண்டாமடி. நீ ஸத்தியபாமையைப்போ லல்லடி. அவள் தன்கணவனை கையில் போட்டுக்கொண்டவள். அவளுக்குநடந்தது. உனக்கு அப்படியல்ல. நீயோ துடைநடுக்கியாச்சுதே என்றுசொன்னேன். ஆசை வெட்கமறியுமாவென்பதுபோல், பிரமாதமாய் ஸாதித்துவிடுவதுபோல்வெண்பட்டு, ஸங்கல்ப்பம், யாசகன், அவனுக்குதானம், அதிலும் உயிர்ப்பிச்சை. இவைகள் எல்லாவற்றிற்கும் ஜலக்கரையில் சத்தியம்வேரு, என்ன ஆடம்பரம் வேண்டியிருக்கு. சகிக்கவில்லையே. கேளுஸுபத்ரே, ஒரு ஸமயம் ஸத்தியபாமை தன்கணவனான கிருஷ்ணனை இன்று ராத்திரிப்படுக்கைக்கு தேவலோகத்திலுள்ள பாரிஜாதமலர் வேண்டுமெனக் கேட்டாள். அடே அப்பா! அந்தகிருஷ்ணன் பட்டபாடோ, தேவலோகத்திற்கு எடுத்த ஓட்டமோ, பாரிஜாதமரத்தைப் பிடித்தபிடியோ, அதை வீட்டுமுத்தத்தில் நட்ட

நடவே, அதன்னுவேலை நீயும் பெண்தான். அவளைக் காட்டிலும் ரூபவதிதான். உன்புருஷனும் அதிரூபன் தான். நீயும்கணவனைகைவசப்படுத்திவிட்டதாகநினைவு. இதுசமயந்தானே கைவரிசையைக் காட்டவேண்டும். என்னவோ கிருஷ்ணன் ஆக்ஞைபாம், அதற்குபயப்படுகிறாளாம். இந்தக்கேட்டுக்கு எப்போதும் ஸுபத்ரையாகவும், கணவன் அர்ஜுனனாகவும், மாமி குந்தியாகவும், மைத்துனர்கள் பாண்டவர்களாகவு மிருக்கவேண்டுமென கிளம்பினள். அப்பா! யமுனையில் நீயும் ஒரு புருஷனைவைத்து ஆளுகிறதுபோல் நடித்தாயே. நான் சொன்னேனே அம்மா; உன்னால் முடியாது. நீயோ பயந்தாங்குள்ளி. உன்புருஷன் உன்பேச்சுக்கு இணங்கமாட்டான். நடவாது, வேண்டாம். முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்டதுபோல்ஆகிவிடும். வேண்டாம், வேண்டாம் என்று சொன்னேன். கேட்டாயா? என்னவோ யுக்தி சொல்லவேண்டுமாம். என்னயுக்தி. கணவனைக் கைவசப்படுத்த ஒருவன் யுக்தி சொல்ல வேண்டுமோ? கேளு சொல்லித்துலைக்கிறேன். உன் கணவனுக்கு அன்னமிடாதே, அதன்பின் தாம்பூலம் கொடாதே, ஏதோ வருத்தமுற்றவள்போல் உன்படுக்கை அறையில் காலோடு தலைமூடிக்கொண்டு படுத்துக் கொள், அவன் சல்லாபமாய் சம்பாஷிக்க உன்னிடம்வந்தால் பேசாதே, சிரிக்காதே, "புகையிலை விரித்தால்போச்சு பெண்பிள்ளை சிரித்தால்போச்சு" என்ற பழமொழியைக் கைக்கொள், மரியாதையாவது, அன்பையாவது, இரக்கத்தையாவது கொஞ்சமேனும் நினையாதே, கணவன் எவ்வளவுபேசினாலும் பதிலுரையாதே, கடைசியாக, கோபத்தோடு தன் கத்தியை

யெடுப்பான். அப்போது மெதுவாக எழுந்து உட்காரு, பத்துச்சொற்களுக்கு ஒருபதில்சொல். என்னவென்று கேழ்ப்பான். எவராவது திட்டினார்களா; அடித்தார்களா; அல்லது எவ்விதத் துன்பம் செய்தார்கள் யெனக் கேட்பான். அப்படி இருந்தால் நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள். உங்கள் காரியத்திற்கு நீங்கள் வந்தீர்கள். காரியமானல் கையை விடு என்று போவீர்கள் என்று சொல்லு. எவனானாலும் துலைத்து விடுவதாக சபதம் செய்வான். அப்போது அவனிடம் உறுதிபெற்றுக்கொள். பின்பு மறைவாக வைத்திருக்கும் இந்த ஆசாமியைக் காட்டு. ஆனால் இவனைக் கண்டதும், ஒருக்கால் கொன்றுவிடுவான். அதற்கு இடம் கொடாதே. இவனைக் காட்டியபின் கோபத்தைக் காட்டாமல், நயவஞ்சகமாய் தனுக்கு, மினுக்கு, குலுக்குகளால் பேர்வழியை உன்ஜோப்பில் போட்டுக்கொள். என்ன விஷயமென்று முதலில் சொல்லி விடாதே. அவன் கேட்டபின், இவனைக் காப்பாற்றுகிறீர்களாவென உறுதி பெற்றுக்கொண்டு, சங்கதியைச் சொல். கிருஷ்ணன் என்றால் மலைப்பான்; திணறுவான். அப்போது நீ போடுகிற போட்டினால்த்தான் அவனுக்கு தைரியம் வரவேணும். என்னைச் சந்தியில் இழுத்துவிடாதே. பாதி தாடி வயோதிகத்தால் உதிர்ந்துவிட்டது. மீதியிருக்கும் பாதியை அவன் உதிர்த்துவிடுவான். இதை மறவாதே. முதலில் என் நினைவு இருக்கட்டும் என்று சொல்லிவிட்டு, சித்திரசேனனை யாசக பிராமணனையும் அழைத்துக் கொண்டு ஊருக்கு வந்தார்கள். சித்திரசேனனை ஓர் உள்ளின் வைத்துப்பூட்டிட்டு, சாவியை ஸுபத்ரையி

டம் கொடுத்து, சொன்னதை மறவாமலிரு என்று சொல்லித் தன் தம்பூரோடு எடுத்துவிட்டார் ஓட்டம். ஸுபத்ரையோ ஐயோ! என்ன செய்வேன். அடைத்து கிடந்தாலும் செட்டி, அவனே இழுத்தானும் தட்டான்" என்பது போலாயிற்றே. இருக்கட்டும் பார்ப்போம் என்று உள் சாவியை பத்திரமாய் வைத்துக் கொண்டு, தன்படுக்கை உள்ளில் படுத்துக்கொண்டாள்.

களம் 9.

ஸுபத்ரை அந்தப்புரம்: அர்ஜுனன் பிரவேசம்.

அயலூர் சென்றிருந்த அர்ஜுனனும் வந்தான். தன் பத்னி எப்போதும் நமது வரவை எதிர்பார்த்து, மலர்ந்த முகத்தோடு இருப்பவள் காணப்படவில்லையே எனச் சிந்தித்தான். சேடிகளை விசாரிக்கையில் படுத்திருப்பதாக அறிந்தான். ஸ்நானபானங்களை முடித்துக்கொண்டு அன்னமிடக் கூப்பிட்டான். வராததினால் என்ன அசௌக்கியமோவென நினைத்து, போஜனம் அருந்திவிட்டு அந்தப்புரம் சென்றான். கதவு தாளிடாமலிருக்கக் கண்டு, உள்ளே சென்றான். பலதரம் ஸுபத்ரையைக் கூப்பிட்டான்; பதிலில்லை. வியாதியோவெனச் சரீரத்தைத் தொட்டுப் பார்க்க, ஒன்றுமில்லையெனக் கண்டான். இப்படிப் பலவாறாக அழைத்தும் பதிலில்லாமையைக்கண்டு, நாரதர் சொல்லியபிரகாரமே பிதற்றலானான். கடைசியாகக் கோபங்கொண்டு உரத்த தொனியோடுகூப்பிட, இதுதான் சமயமென்று ஸுபத்ரை உடனே மெதுவாக எழுந்து, தன்கிட்ட வரவொட்டாமல் நாரதர் சொல்லியபடி வந்திருக்கும் புமானை காப்பாற்றுகிறதாக அவனிடம்

வாக்குறிதி பெற்றுக்கொண்டு, அதன்பின் உல்லாசமாய் அவன் மனம்போலிருந்து பேர்வழியைக் காட்டிவைத்து ரக்ஷிக்குமாரு வேண்டினள். அர்ஜுனனுக்கு ஸுபத்ரையால் சொல்லப்பட்ட சித்திரஸேனன் ஸங்கதியையும் அதற்காக நாரதர் தன் பத்னிக்கு இந்தந் தடியனை ரக்ஷிக்கவேண்டி செய்த உபாயத்தையும், கேட்டு நினைத்து நகைத்தான். அதன்பின் கிருஷ்ணன் ஆக்ஞையை நினைத்து அதை தடுக்கமனமில்லாதும் தன்னால் தடியனை ரக்ஷிப்பதாக தன் பத்னியிடம்கொடுத்த வாக்குருதியை நிறவேற்ற உபாயத்தையும் நினைத்தான். உபாயம் ஒன்றும் ஸரிப்படவில்லை. கடைசியாக கிருஷ்ணனுக்கும் தனக்கும், மனஸ்தாபம் வந்தாலும், வாக்குருதியை நிறவேற்ற வேண்டுமென்று திட்டம் செய்துகொண்டு தடியனை மருபடியும் உள்ளே தள்ளி பூட்டின் சாவியை தான் எடுத்துக்கொண்டான். அப்போது நாரதர் அறிந்தார் நன்றாய்! ஒரு ஸ்திரீக்காக அதிவீரனும் சூரனுமான அர்ஜுனன் படும்பாட்டை, இதுவா இன்னமுமிருக்கிறது என நினைத்துக்கொண்டு, அதை நிறைவேற்ற கிளம்பிவிட்டார், ஸுபத்ரையை விட்டகன்ற நாரதர் நேராக த்வாரகாபட்டணம் சேர்ந்து கிருஷ்ணனைக்கண்டார். கிருஷ்ண பரமாத்மா இவருக்கு மரியாதைசெய்து ஏதாகிலும் விசேஷமுண்டோவெனவினவ, வேரு ஒன்றுமில்லை. ஆனால் பூலோகத்தில் வஸித்தும் சித்திரஸேனனால் பெருத்த அவமானத்தை யடைந்த காலவரிஷியானவர் பிராணத்யாகம் செய்துகொள்ளப்போவதாக வதந்தி. இதைத் தவிர்த்து ஒன்றும் விசேஷமில்லை என்றார் நாரதர். இந்த கர்ணகடூரமான வார்த்தையைக் கேட்டதும்

கிருஷ்ணபரமாத்மாவுக்கு மனம் படபடத்து சரீரம் குன்றிற்று.

கிருஷ்ணன் :—நாரதரே! எதைவேண்டி காலவரிஷி திடீரெனப்ராணத்யாகம் செய்கிருர்.

நாரதர் :—எதைவேண்டியா? எல்லாம் நீர்செய்த மோசத்தை வேண்டித்தான்.

கிருஷ்ணன் :—நான் என்னமோசம் அவருக்கு செய்தேன்.

நாரதர் :—என்ன மோசம்? அரசனென்ருல் அனீதியன்றும், வாக்குருதியோடு மிருக்கவேண்டும். அதைத் தவிர்த்து ஒருவன் செய்த பிசகை அரசனிடம் சொல்லி அதற்குவேண்டிய சாக்ஷிபங்களும் விட்டபின் அரசனுல் தீர்மானம் சொன்னுல், அத்தீர்மானம் வீணுக ஆகலாமோ? அப்படி ஆகிவிட்டால் அது நியாயமாகுமோ "கண்டால் காமாச்சி நாயகர், காணுவிடில் வடுகப்பயலா" வெகு ஒழுங்குதான்.

கிருஷ்ணன் :—எனக்குப் புலப்படச் சொல்லவேண்டும். அப்படிக்கிருந்தால் நானே தண்டித்து கொள்வதில் தடையில்லை.

நாரதர் :—உம்மை தண்டிக்கவாவது அனீதியை எடுத்துரைக்கவாவது இங்குவந்தவனன்று. ஆனுல் உம்ராஜ்ய பரிபாலனத்தில் செவ்வனே நடக்கவேண்டுமெனத் தெரிவிக்க வந்தவனென்று அறியவில்லைபோலும். இருக்கட்டும் காலவரிஷியும் நானும் சேர்ந்து சித்திரசேனன் விஷயமாய்வந்து சொன்னதற்கு என்ன சொன்னீர். நன்ருய் நினைத்துப்பாரும் தெரியும், ஓஹோ! இவன் ரிஷிதானே இவனுக்கு ராஜ்யபரிபாலன சூது

விஷயத்தில் என்ன தெரியும் என்று நினைத்து விட்டீர் போலும், நானும் அரிவேன்.

கிருஷ்ணன் :—என் இவ்வளவு கோபம். அப்போதே என் சக்கிர ஆயுதத்தைகொண்டு அவன் தலையை அறுத்து விடும்படி ஆக்யாபித்து விட்டேன். அதுதான் முடிந்திருக்குமே. இதுதானு இவ்வளவு தெடபுடல் அடே அப்பா! இவ்வளவுதானே இன்னமும் உண்டோ.

நாரதர் :—முடிந்திருக்குமா? உம்ம ஆக்யைக்கா? வெகுநேர்த்திதான். அந்தத்தடிப்பயல் ஸுபத்ரையிடம்போய் நமஸ்கரித்தானும். அவளென்னவோ உயிர்ப்பிச்சை கொடுத்தாளாம். அந்தப்பயலேயும், உள்ளே போட்டுப் பூட்டிவிட்டு நேத்தியப்பயல் அர்ஜுனன், அந்தப்பயலிடம் சவிகைசொல்லி அந்தப்பயலும் எவனடா சொல்லுகிறவன், சக்கிரமாவது, சாரங்கமாவது, வரட்டும் பார்ப்போம் என்கிருனும். பெண்டாட்டி வாக்குருதியைக் காட்டிலும் கிருஷ்ணன் வாக்குருதி மகாபெரியதோ வென்ருனும். பெண்டாட்டி சொல்லேமீறி நடந்தால் அவள் இறந்துவிடுவளே! அப்படி இறந்தால் கிருஷ்ணன் அதே சுபத்ரையை கொடுப்பானே வென்ருனும். இதுவா, இன்னம் எவ்வளவோ. சொன்னுல் பிரமாதமாகிவிடும். நமக்கேன் கேடு. இருந்தாலும், ஏதடா கிருஷ்ணன்யாரு, நாம்யாரு, நம்மசித்தப்பனன்ரு. அவர்வாக்கை அவமதிக்கலாமா, என்று கொஞ்சமேனும் அந்த ஸுபத்ரையும் நினைக்கவில்லே. அதுபோனுலும், அர்ஜுனனுவது ஏதடா, கிருஷ்ணன் நம் சிறிய மாமனுரல்லவா. அதுதான் வேண்டாம். நம்ம குடும்பத்தை ரக்ஷிப்பவரன்ரு, அவர்வாக்குக்குமருவாக்கு கொ

டுக்கலாமாவென்று நினையாது, "பெண்டாட்டி ஆத்தே பெரியாத்தே" என்றதுபோல் அந்தத்தடியனை ரக்ஷிக்கப்போகிறானும். இவ்வளவுதானய்யா நடந்தது. இதைகேட்ட காலவரிஷி நல்ல ராஜாங்கமில்லை. இனி இருப்பதைக்காட்டிலும் மரணமாகுவதேமேல் என்று நினைத்துபிராணத்தியாகம் செய்யப்போகிறாராம். நியாயம் தானே. என் கெதியும் அப்படித்தான் முடியும், இந்தக்கேசில் அந்தத்தடியனை விட்டால் அவன் சும்மா விடுவானா? வாதியையும், சாக்ஷிக்காரனையும், தாடியைப் பிடித்து ஒன்றாய் முடிந்து வைக்கோல்ப்புரையனுக்கு கடாவடிவிட மாட்டானா? இது நடக்கத்தான் போகிறது. நீரும் சிரிப்பீர். என் பிராணனும் போகும். தொலைந்தான் கிழவன், இனிகலகம் விட்டது. நாம் நேர்ந்தபடி ராஜ்யமாளலாம் என்று முடிவுகட்டி விடுவீர் என்றார் நாரதர். கிருஷ்ணன்கேட்டதும், சரீரம் குலுங்கிற்று. ஓய் நாரதரே! நம்ம சுபத்ரையா, நம்ம அர்ஜுனனா இவ்விதம் நினைத்தார்கள்.

நாரதர்:—நினைத்தார்களா? கதையா என்ன. சக்கிரம் போன இடம் தெரியவில்லை. அந்தத் தடிப்பயலோ "பலிங்கிச்சு" அடிக்கிறான். நானோ தாடியை முடிக்கொண்டு திரிகிறேன். இதுவேரு நம்ம அர்ஜுனனா, இதுவேரு அருமை, சொந்தம், வாஞ்சை, கிட்டவந்தால் மண்டையை ஒடைத்து விடுவதாகச் சொல்லுகிறான். "நம்ம" என்றவார்த்தையை நிறுத்தி மண்டையில் காயப்படாமலிருக்கும்படி கெட்டிக்குல்லாய் ஒன்றைப் போட்டுக்கொண்டு அவன் கிட்டேபோம். நாழிகையாச்சுது தேவலோகம் போகவேண்டும். கால

வரிஷி சாகவேண்டியது தானே உம்ம இஷ்டம் சொல்லும். நானும் ஸ்னனம் பண்ணிவிடுகிறேன்.

கிருஷ்ணன் :—அர்ஜுனன் விடுகிருனு? இல்லையாவென்று ஒருதரம் கேட்டுவாரும்.

நாரதர் :—ஓய் "ஏலமா" வென்ன ஒருதரம் இரண்டுதரம், மூன்றுதரம் என்பதற்கு இதுவேரு அவமானமா வர வேண்டும் என்று சொல்லிக்கிளம்பினுர். அர்ஜுனனிடம் சென்றுர்.

அர்ஜுனன் :—நாரதரே வரவேண்டும், கையிலென்ன வரிச்சாணியா, மருசுத்து ஆணியா?

நாரதர் :—ஒன்றுமில்லை தம்பூரு. அதென்ன வரிச்சாணி என்கிறுய்.

அர்ஜுனன் :—இல்லை முன்தடவையில் நானில்லாதபோது ஸுபத்ரைக்கு ஒரு திருகாணியை நன்றுய்த் திருகி விட்டுப்போய் விட்டீரே. இப்போது அதே ஆணி தானோ அல்லது வரிச்சாணியாவென்றேன். இருக்கட்டும், என்ன விஷயம் தடியனுக்கு எதாவது விமோசனம் உண்டா இல்லையா? கிருஷ்ண பரமாத்மா என்ன சொல்லுகிறுர். எதாவது தெரியுமா?

நாரதர் :—அப்பா! அவர் போடுகிறதாவது பெண்ணும்வாண்டாம் மாப்பிளையும் வேண்டாம். அந்தத்தடியனை விடுகிருனு அல்லது யுத்தத்திற்கு வந்துமாண்டு போகிருனு என்று ஒரே கேள்வை கேட்டுவா வெனச் சொன்னுர். எனக்கேண்டா இந்தக் குடைச்சலும், அலைச்சலும், மாப்பிளையாச்சு, மாமனுர் ஆச்சு, நான்

என்னடா போஸ்டு பியூன் மாதிரி அரிவிக்கிறவன் தானே. நீர் அரிவிப்பதிலேயே ஆள் பிராணனும், அவனைச்சேர்ந்தவாள் பிராணனும் போகும் போலிருக்கிறதே. காரியத்தை ஒப்புகொண்டு விட்டால் என்ன கெதியோ பூலோகம் புவர்லோகம், எல்லாம் போக வேண்டியதுதான். இருக்கட்டும், கிருஷ்ணன் சொற்படி அனுப்பாவிட்டால் என்ன செய்வாரோ?

நாரதர்:—தடியனைக் கொல்வதைநிறுத்தி உங்கள் இருவரையும் கொல்வாராம். விட அபிப்பிருயமில்லாவிட்டால் யுத்தத்திற்குவரும்படி சொல்லச்சொன்னார். இவ்வளவுதான் என்றார்.

களம் 10.

பக்தன் அர்ஜுனனை பக்தரக்ஷகனை ஸ்ரீகிருஷ்ணபரமாத்மா ரக்ஷித்தல்.

அர்ஜுனன்:—கொன்றுவிடுவாரா? அவர் பராக்ரமத்தை நான் நன்றாய் அறிவேன். வரச்சொல்லும் யுத்தத்திற்கு என்று சொல்லி காண்டீபமும் கையுமாய் வெளியில் வந்துவிட்டான். நாரதருக்கு இவனிருக்கும் கோபத்தில் தன்னைக் கொன்றுவிட்டால் என்ன செய்வதென்றும், தலைதப்பினது தம்பிரான் புண்யமென்றும் நினைத்து, அதிவேகமாக ஓடி கிருஷ்ணனிடம் சென்று ஐயோ! கிருஷ்ணனுவது ராமனுவது கொல்லுகிறதாவது என்றான் ஸுபத்ரை. இந்தப்பயலும் அந்த தடியனும் முண்டாவைப் பிரட்டுகிறான்; சிரிக்கிறான். அந்தத் தடியன் என் தாடியையே பார்க்கிறான். ரொம்ப அவமானமாகிவிட்டது. பொண்டாட்டி மருந்து

விர், விர் என்று எறிவிட்டது. வேணுமானல் யுத்தத்திற்கு வரச்சொல்லும். இல்லாவிடில் ருக்மணி ஸத்யபாமையின் திருமங்கல்யங்களை கெட்டியாய்ப் பொத்திக்கொண்டு சமயற்கட்டில் இரும். கட்டாயம் இங்கு வந்துவிடுவான் நிச்சயம். கிருஷ்ணனுக்கு உடனே கண்கள் சிவந்தது. உதடு துடித்தது. சரீரம் பதைபதைத்தது. யுத்தகளத்தை நாடி கிருஷ்ணனும் வந்துவிட்டார். இதுசேதி கிருஷ்ணனின் தமயனுன பலராமருக்குத் தெரிந்து, தன் கலப்பை ஆயுதத்தோடு தங்கை ஸுபத்ரையையும், மாப்பிளை அர்ஜுனனேயும் ரக்ஷிக்கவேண்டி கிருஷ்ணனேடு யுத்தம் தொடுக்க யுத்தகளத்திற்கு வந்துவிட்டார். அர்ஜுனனுக்கும் கிருஷ்ணனுக்கும் பிரமாதமான யுத்தம்நடக்க ஆரம்பமாயிற்று. இதுசேதி காலவரிஷி கேட்டு, திடுக்கிட்டு ஐயோ! அனியாயமாய் நம்மைவேண்டி கிருஷ்ணன் அர்ஜுனனைக் கொல்லவும், பாரதயுத்தமானது நின்றுபோய்விடவும், ஸுபத்ரை மாங்கல்ய மிழக்கவும், பலராமர் நம்மைக் கொல்லவும், கிருஷ்ணன் பலராமரைக் கொல்லவும் ஏற்படுமே என்று நினைத்து, கிருஷ்ணனிடம் சென்று தன்பிராதை வாபஸ் வாங்கிக்கொண்டு, அர்ஜுனன் பக்தனன்ருே? தாங்கள் பக்தரக்ஷகனுச்சுதே. அவனேடு போர் புரியலாமா? அவனுக்குக் கேடு வந்தால், பிந்தி நடக்கவேண்டிய பாரதயுத்தம் எப்படி நடக்கும்? இவ்வளவு வேலைக்கும் நாரதரென்று அறியவேண்டாமா யெனச்சொல்லவும், தேவாள் அசுராள், கெந்தர்வாள், சித்தாள், வித்யாதுராள் எல்லோரும் சமாதானம் சொல்ல, இருவரும் விலகி அர்ஜுனன் கிருஷ்ணனைப்பணிய, கிருஷ்ணனும் ஆசிர்வதி

த்து, தன் சக்கிரத்தை ஆகர்ஷித்து, சித்திரசேனனை விடுவித்து, அவரவர்கள் ஸ்வஸ்தானம் அடைந்தார்கள். நாரதரும் தானும் சமாதானம் செய்யத் தலைப்பட்டு தன்னிருப்பிடம் சென்றார்.

ஆகையால் ஈசுவரனிடத்தில் அதிபக்தனாயுள்ளவன் எவ்வளவு அபராதம் செய்தபோதிலும், அதை க்ஷமித்து ரக்ஷிக்கிறார் என்பது இச்சரித்திரத்தால் நன்குவிளங்குகின்றது. மேலும், பெரியோர்கள் தனக்கு எவ்வளவு மான ஹானி வந்தாலும் அதைச் சற்றேனும் கவனியாது லோகத்தின் ஸம்ரக்ஷணையையே பெரிதென மதிக்கிறார்கள். இதையெல்லாமறிந்த நாம் பெரியோர்கள் நிந்தனை, ஈசுவர அபசாரம்,பாபகாரியத்தில் பிரவேசித்தல் ஆகிய தீத்தொழிலினின்றும் விலகி நல்லுலகத்தை நாடவழி தேடவேண்டுமென்பதே இக்கதையின் கருத்து. சுபம்! சுபம்!! மங்களம்!!!

முற்றிற்று.

Printed at the L. V. Press, Kumbakonam.